# ஒன்டாரியோவில் உடல்நலப் பராமரிப்பு: மருந்துக் குறிப்புள்ள மருந்துப் பொருட்களைப் ற்றுக்கொள்தல்

நீங்கள் நோய்வாய்ப்படும்போது அல்லது காயப்படும்போது மருந்துகள் உட்கொள்ள வேண்டியிருக்கலாம். சில நிலைமைகளில், ஒரு மருத்துவரையோ அல்லது ஒரு தாதியையோ சந்திக்காமல் மருந்துப் பொருட்களை ஒரு மருந்து விற்பனைக் கடையிலேயே வாங்கிக்கொள்ளலாம். இவை மருந்துக் குறிப்பு இல்லாத மருந்துப் பொருட்கள் (ஓவர் த கவுன்டர்) என அழைக்கப்படுகின்றன.

வேறு மருந்துப் பொருட்களுக்கான ஒரு மருந்துக் குறிப்பை உங்களுக்குக் கொடுப்பதற்கு ஒரு மருத்துவரோ அல்லது ஒரு தாதியோ உங்களுக்குத் தேவைப்படும். ஒரு மருந்துச் சீட்டு, நீங்கள் என்ன மருந்தை(களை) உட்கொள்ளவேண்டும், எவ்வளவு அடிக்கடி மற்றும் எத்தனை நாட்களுக்கு உட்கொள்ளவேண்டும் என்ற விபரங்களை ஒரு மருந்தாளுநருக்குத் தெரிவிக்கும். மருந்துப் பொருட்களை எப்படிப் பாதுகாப்பாக உட்கொள்ளவேண்டும் என்பது பற்றி மருந்தாளுநர் உங்களுக்குத் தெரிவிப்பார்.

ஒரு மருந்துச் சீட்டை வைத்து நீங்கள் என்ன செய்யவேண்டும்? மருந்துப் பொருட்களுக்கான கட்டணத்தைச் செலுத்துவதில் உதவக்கூடிய மருந்துப் பொருட் திட்டம் (ட்ரக் பிளான்) எதாவது இருக்கிறதா? இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்கள் அதைப்பற்றி விளங்கிக்கொள்ள உங்களுக்கு உதவி செய்யும்:

- ஒரு மருந்துக் குறிப்புடன் மருந்துப் பொருட்களை எப்படிப் பெற்றுக்கொள்வது
- ஒன்டாரியோவில் மருந்துக்குறிப்புள்ள மருந்துப் பொருட்களுக்கு யார் பணம் செலுத்துவார்

*நீங்கள் இந்தத் தகவல் இதழை மேலதிக மொழிகளில் ontario.ca/healthcarebasics என்ற இணையதளத்தில் காணலாம். "வேற்று மொழிகளில் தகவல்கள்" என்ற விசைப் பொறியை அழுத்தவும். ஒன்டாரியோவில் மருத்துவப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வது பற்றி மேலதிகமாகத் தெரிந்துகொள்வதற்கான இணைப்பையும் இந்த இணையதளம் உங்களுக்குக் கொடுக்கும்.*

**1. எனது மருத்துவர் எனக்கு ஒரு மருந்துக் குறிப்பைக் கொடுத்துள்ளார். அதை வைத்து நான் என்ன செய்யவேண்டும்?**

Tamil – Health Care in Ontario: Getting Prescription Drugs Cat# 015666 Nov/2010 © Queen's Printer for Ontario

Ontario

உங்கள் மருந்துச் சீட்டு ஒரு மருந்துக் கடையினால் (இது ட்ரக் ஸ்டோர் எனவும் அழைக்கப்படும்) நிரப்பபட்டிருக்கவேண்டும். இருப்பிடம் மற்றும் திறந்திருக்கும் நேரம் போன்ற காரணங்களின் அடிப்படையில் ஒரு மருந்து விற்பனைக் கடையை நீங்கள் தெரிவு செய்யலாம்.

மருத்துவமனைப் பணியாளர், மருந்துச் சீட்டு மற்றும் உங்கள் பெயர், விலாசம் மற்றும் தொலைபேசி எண் போன்ற உங்கள் தனிப்பட்ட தகவல்களையும் சரி பார்ப்பார். உங்கள் மருந்துப் பொருட்களுக்கான கட்டணத்தைச் செலுத்த உதவிசெய்யும் ஒரு மருந்துப் பொருட் திட்டம் உங்களுக்கு இருந்தால், அந்தத் தகவலையும் நீங்கள் அளிக்கவேண்டும். மருந்துப் பொருட்களை எப்படிப் பாதுகாப்பாக உட்கொள்ளவேண்டும் என்பதை மருந்தாளுநர் உங்களுக்குத் தெரிவிப்பார். மருந்து உட்கொள்வது பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், அதைப் பற்றிக் கேட்பதற்கு நிச்சயமாக இருக்கவும்.

### 2. மருந்துக் குறிப்புள்ள எனது மருந்துப் பொருட்களுக்கு ஒன்டாரியோ அரசாங்கம் பணம் செலுத்துமா?

ஒன்டாரியோவின் மருந்துப் பொருட் திட்டங்கள் ஒன்றிற்கு நீங்கள் தகுதியுள்ளவராக இருக்கலாம். அவை பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்:

- Ontario Drug Benefit Program. இந்தத் திட்டம், ஊட்டச் சத்துப் பொருட்கள் மற்றும் நீரிழிவுப் பரிசோதனைப் பொருட்கள் உட்பட 3,300 க்கு மேற்பட்ட மருந்துப் பொருட்களுக்கு பணம் செலுத்துகிறது. 65 வயதுக்கு மேற்பட்ட எல்லா ஒன்டாரியோப் பிரஜைகளும் இந்தத் திட்டத்தில் தாமாகவே சேர்க்கப்படுவார்கள்.
- Trillium Drug Program. இந்தத் திட்டம் மருந்துக் குறிப்புள்ள மருந்துப் பொருட்களுக்காகத் தங்கள் வருமானத்தின் மிகப் பெரும் பகுதியை செலவிடும், ஒன்டாரியோவில் வாழும் மக்களுக்கானது.

அல்லது, நீங்கள் வேலை செய்பவராக இருந்தால், உங்கள் மருந்துப் பொருட்களுக்கான செலவில் சிறிதளவு அல்லது முழுவதையும் செலுத்தக்கூடிய மருந்துப்பொருளுக்கான ஒரு திட்டத்தை உங்களுக்கு வேலை வழங்குபவர் அளிக்கக்கூடும்.

### 3. ஒன்டாரியோ ட்ரக் பெனிஃபிட் திட்டம் அல்லது டிரில்லியம் மருந்துப் பொருட் திட்டத்திற்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்கலாம்?

இந்தத் திட்டங்களுக்கு தகுதியுள்ளவராவதற்கு நீங்கள் குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்குட்பட வேண்டும்.

*ஒன்ட்டரியோ டரக் பெனிஃபிட் திட்டத்தில் சேர்வதற்கு:* இந்தத் திட்டம் முக்கியமாக முதுநிலையிலுள்ளவர்கள் மற்றும் இல்லம் தேவைப்படுவோர் அல்லது நீண்ட-காலப் பராமரிப்பிலுள்ளவர்களுக்கானது. நீங்கள்

- 65 வயதுக்கு மேற்பட்டவர், மற்றும்
- செல்லுபடியாகும் ஒன்டாரியோ உடல்நல அட்டை ஒன்றை வைத்திருப்பவர், ஆயின்,

நீங்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை. வெறுமனே நீங்கள் உங்கள் மருந்துக் குறிப்புச் சீட்டு மற்றும் உங்கள் உடல் நல அட்டையை எடுத்துக்கொண்டு உங்கள் மருந்து விற்பனைக் கடைக்குச் செல்லலாம். நீங்கள் இப்போது ஒன்டாரியோ ட்ரக் பெனிஃபிட் திட்டத்துக்குச் சட்டப்படி தகுதியானவர் என மருந்தாளுநரிடம் தெரிவிக்கவும். மருந்தாளுநர், அரசாங்க உடல்நல இணையதளத் தொகுதியினூடாக நீங்கள் தகுதியுள்ளவரா என்பதைச் சரி பார்ப்பார்.

நீங்கள் செலுத்தவேண்டிய பணத்துக்கு இணைக் கட்டணங்கள் மற்றும் கட்டணக் குறைப்புகள் என்பன இருக்கின்றன. $2 க்குக் குறைவான ஒரு இணைக்கட்டணத்துக்காக நீங்கள் விண்ணப்பம் செய்ய முடியும்.

*குறிப்பு:* நீண்ட-காலப் பராமரிப்பு அல்லது இல்லப் பராமரிப்பு போன்ற வேறு ஒன்டாரியோ உடல்நலப் பராமரிப்புத் திட்டத்தினூடாகவும் நீங்கள் இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ளலாம். அந்தத் திட்டத்தில் சேர்வதற்கு விண்ணப்பிக்க உங்களுக்கு உதவி செய்யும் நபர் ஒன்டாரியோ ட்ரக் பெனிஃபிட் திட்டத்திற்கும் விண்ணப்பிக்க உதவி செய்வார்.

***டிரிலியம் ட்ரக் திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு :*** ஒரு விண்ணப்பத் தொகுப்பை உங்கள் உள்ளூர் மருந்து விற்பனைக் கடையிலிருந்து நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். அல்லது 1-800-575-5386 ஐ அழைக்கவும். விண்ணப்பப் படிவம் மற்றும் வழிகாட்டியை இணைய தளத்திலும் நீங்கள் காணலாம்.

### 4. ஒன்டாரியோவிலுள்ள உடல்நலப் பராமரிப்புத் தொகுதியைப் பயன்படுத்துவது சம்பந்தமாக எனக்குக் கேள்விகள் இருக்கின்றன. நான் யாரை அழைக்க முடியும்?

காலை 8:30 முதல் மாலை 5:00 மணிவரை சேர்விஸ் ஒன்டாரியோவை இன்ஃபோலைனில் தொடர்பு கொள்ளவும். பணியாளர்களால் ஆங்கிலம், பிரெஞ் மற்றும் வேறு 20 மொழிகளில் உங்களுக்கு உதவி செய்ய முடியும். பின்வரும் எண்ணை அழைக்கவும்:

- 1-866-532-3161
- டிடிவை 1-800-387-5559
- டொரொன்டோவில், டிடிவை 416-327-4282

இங்கு மேலுமதிகத்தை இணையத்தளத்தில் கற்கலாம் health.gov.on.ca